பொது நிர்வாக சுற்றறிக்கை இல:-01/2002

எனது இல.1/104/தொ.ச
இணைந்த சேவைகள் பிரிவு
பொது நிர்வாக,முகாமை மற்றும்
மறுசீரமைப்பு அமைச்சு,
சுதந்திர சதுக்கம், கொழும்பு.07
2002.01.17

அமைச்சின் செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்,
மாவட்டச் செயலாளர்களுக்கும்

**<u>மொழிபெயர்ப்பாளர் சேவையில் வகுப்பு 11 ஐ இல்லாதொழித்தல்</u>**

மொழிபெயர்ப்பாளர் சேவையின் வகுப்பு 11 ஐ 2001.07.01 ஆந் திகதி தொடக்கம் செயற்படும் வண்ணம் இல்லாதொழிப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

02. அதன்படி,

(அ) மொழிபெயர்ப்பாளர் சேவையின் வகுப்பு 11 தரம் 1 உள்ள அலுவலர்கள் குறித்த சேவையில் 15 வருடகாலத்தை பூர்த்தி செய்யும் திகதி அல்லது 2001.07.01 ஆந் திகதி ஆகிய இரு திகதிகளில் முன்னராக அமையும் திகதியிலிருந்தும்,

(ஆ) மொழிபெயர்ப்பாளர் சேவையின் வகுப்பு 11தரம் 11 இலிருந்து வகுப்பு 11 தரம் 1 க்கு தரமுயர்த்தும் பரீட்சையில் சித்தியடைந்த அலுவலர்கள் அந்தப் பரீட்சையில் சித்தியெய்திய திகதி அல்லது 2001.07.01 ஆந் திகதி ஆகிய இரு திகதிகளில் முன்னராக அமையும் திகதியிலிருந்தும், (இ) வகுப்பு 11 தரம் 11 இல் உள்ள ஏனைய அலுவலர்கள் 2001.07.01 ஆந் திகதியிலிருந்தும்

மொழிபெயர்ப்பாளர் சேவையின் வகுப்பு 1 க்கு உள்ளீர்க்கப்படுவர்.அவ்வாறு உள்ளீர்க்கும் போது மேலே இ இல் குறிப்பிட்டுள்ள அலுவலர்கள் அ மற்றும் ஆ வில் குறிப்பிட்டுள்ள அலுவலர்களைப் பார்க்க கனிஸ்ட அலுவலர்களாக இருக்க வேண்டும்.

03. மேற்படி உள்ளீர்க்கப்படுகின்ற அலுவலர்கள் அவ்வாறு உள்ளீர்க்கப்படுகின்ற திகதியிலிருந்து ஏற்புடைய சம்பள அளவுத் திட்டத்தில் அமர்த்தப்படுவதுடன், அவர்களுக்கான நிலுவைச் சம்பளங்கள் 2001.07.01 ஆந் திகதியிலிருந்து செலுத்தப்படும்.

04. இவ்வாறு மொழிபெயர்ப்பாளர் சேவை வகுப்பு 1 க்கு உள்ளீர்ப்பதற்காக மொழிபெயர்ப்பாளர் சேவையின் வகுப்பு 11/11 மற்றும் 11/1 இல் இருக்கின்ற அலுவலர்களுக்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவ உருவில் 2002.03.31 ஆந் திகதிக்கு முன் தமது திணைக்களத் தலைவர்கள்/ நிறுவனத் தலைவர்கள் ஊடாக இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடம் விண்ணப்பிக்குமாறு அறிவிக்க வேண்டும்

எஸ்.ரணுக்கே
செயலாளர்,
பொது நிர்வாக,முகாமை மற்றும் மறுசீரமைப்பு அமைச்சு

**மொழிபெயர்ப்பாளர் சேவை வகுப்பு 11/11 மற்றும் வகுப்பு 11/1 இல் உள்ள அலுவலர்களை வகுப்பு 1 க்கு உள்ளீர்ப்பதற்கான விண்ணப்பம்**

01. விண்ணப்பதாரரின் பெயர்:

02. அமைச்சு/திணைக்களம்

03. மொழிபெயர்ப்பாளர் சேவையில் நியமனம் செய்யப்பட்ட திகதி:

04. இணைந்த மொழிபெயர்ப்பாளர் சேவைக்கு உள்ளீர்க்கப்பட்ட திகதி:

05. தற்போது இருக்கும் தரம்:

06. தற்போது இருக்கும் தரத்திற்கு நியமனம் செய்யப்பட்ட திகதி:

07. மொழிபெயர்ப்பாளர் சேவையின் வகுப்பு 11/1க்கு நியமனம் செய்யப்பட்டுள்ளது தரமுயர்வுப் பரீட்சை பெறுபேறுகளின் பேரிலாயின் குறித்த பரீட்சையில் சித்தியெய்திய திகதி:

மேலே 1 தொடக்கம் 7 வரை என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் சரியானவையென சான்றுபடுத்துகின்றேன்.

திகதி:............................................................

.......................................................................................

திரு/திருமதி/செல்வி .................................................................................................................. ஆல் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகவல்கள் சரியானவையெனச் சான்றுப்படுத்துகின்றேன்.

..................................................................................................

திணைக்களத் தலைவரின் /நிறுவனத் தலைவரின் கையொப்பம்

அலுவலக முத்திரை

திகதி:....................................................................